# சீர்காழி நகராட்சி



**2018–ம் ஆண்டு ஜீன் மாதம் 18.06.2018 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதா கூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள் எண்–1 | சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகர பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளில் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிப்பதற்கு நுண்உரம் செயலாக்க மையம் அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் நடத்தப்பட்ட மாதாந்திர ஆய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கியதின் பெயரில் சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட தென்பாதி சாய் பாபா கார்டனில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் நுன்உரம் செயலாக்க மையம் அமைக்க இந்நகர் மன்ற தீர்மான எண் – **204** நாள் – **16.05.2018** ல் ரூ.**56.00** இலட்சத்திற்கு திட்ட பிரேரனை சமர்பிக்கப்பட்டது. மேலும் **14.06.2018** அன்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் கூறிய அறிவுறைகளின் படி பணிகள் மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு ரூ.**90.80** இலட்சத்திற்கு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும், இந்நகராட்சியின் நிதி நிலமையினை கருத்தில் கொண்டு முழுமான்யமாக கோரி அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். **(1190/2018/இ1)** |
| பொருள் எண்–2 | இந்நகராட்சி **2018 – 2019** ம் ஆண்டிற்கு ஆணையர் மற்றும் அலுவலக பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கு மற்றும் அலுவலக பணியாளர்கள் பதவி உயர்வின் காரணமான பணிமாறுதலில் வருவதற்கு பயணப்படி மற்றும் தினப்படி வழங்க ரூ.**120000/-** ம் பணி ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதி வட்டி மற்றும் நிர்வாக பங்கு தொகை வழங்க ஏதுவாக ரூ.**150000 /-** ம் ஆக மொத்தம் உத்தேச செலவினம் ரூ.**270000/-** க்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**1624/2016/பி2** |
| பொருள் எண்–3 | சீர்காழி நகராட்சி பொது நிதி திட்டம் –**2018–19** ன் கீழ் சீர்காழி நகராட்சி அலுவலகத்திற்கு கணினி உபகரணங்கள் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் **28.05.2018** அன்று கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள விலைப்புள்ளி ளவிவரம் |
|---|---|---|
| 1. | XPLORE SYSTEMS,<br>A.R. Najum Complex, 1st Floor,<br>28/5 Town Extension,<br>Mayiladuthurai – 609001 | 4,26,600.00 |
| 2 | Deepam Computers,<br>13-D Cutchery Road,<br>Mayiladuthurai – 609001 | 4,39,000.00 |

| | | |
|---|---|---|
| 3 | Thangam Systems, Sales & Service,<br>G-6 ATS Trade Center, Palakarai,<br>Mayiladuthurai – 609001 | 4,47,350.00 |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்- 1ல் கண்டுள்ள XPLORE SYSTEMS, A.R. Najum Complex, 1st Floor, 28/5 Town Extension, Mayiladuthurai – 609001 என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்–8208/2015/இ1)

**பொருள் எண்–4**

இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி -2018-19 -ன்கீழ் சீர்காழி நகராட்சி அலுவலக வளாக மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் புதிய ஆழ்துளாய் கிணறு அமைக்கும் பணிக்கு ரூ.3,10,000/- இலட்சத்திற்கு பணி செய்திட 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | ஆர். தனராஜ் ஒப்பந்ததாரா் சீர்காழி | ரூ.2,70,612.85 | ரூ.2,70,448.00 | (-) 0.06 % (குறைவு ) |
| 2 | ஆர். கலைவாணன் ஒப்பந்ததாரா் சீர்காழி | | ரூ.2,71,092.00 | (+) 0.18 % ( அதிகம் ) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஆர்.தனராஜ் ஒப்பந்ததாரா் ,சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.06% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம

**பொருள் எண்–5**

இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி -2018-19 -ன்கீழ் சித்தமல்லி கொள்ளிடம் ஆற்றில் உள்ள இரண்டு தரை மட்ட கிணறுகளை தூர்வாரும் பணி மற்றும் புதிய 15 HP மின் மோட்டார் பொருத்தும் பணிக்கு ரூ.2,10,000/- இலட்சத்திற்கு பணி செய்திட 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்ததாரா் ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்த மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | ஆர். தனராஜ் ஒப்பந்ததாரா் சீர்காழி | ரூ.1,82,839.13 | ரூ.1,82,691.00 | (-) 0.08 % (குறைவு ) |
| 2 | ஆர். கலைவாணன் ஒப்பந்ததாரா் சீர்காழி | | ரூ.1,83,009.00 | (+) 0.09 % ( அதிகம் ) |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஆர்.தனராஜ் ஒப்பந்ததாரா் ,சீர்காழி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டைவிட (-) 0.09% குறைவாக உள்ளதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள் எண்–6 | சீர்காழி நகராட்சி – புதிய பேருந்து நிலைய பொது கழிவறை செப்டிக்டேங் நிரம்பியதை கழிவுநீர் வாகனம் கொண்டு அகற்றுவதற்கு தற்போது உள்ள சூழ்நிலையில் உடன் அகற்றும் பொருட்டு சுத்தம் செய்து பராமரித்திட அவசர அவசியம் கருதியும் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15- ன்கீழ் சினேகா செப்டிக்டேங் கழிவுநீர் வாகனம் கொண்டு அகற்றி சரிசெய்யும் பணியினை மேற்கொள்ள பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டமையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(அ-கு) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்:951/2018/எச்1) |
| பொருள் எண்–7 | சீர்காழி நகராட்சியில் குப்பை அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் டம்பர்பிளேசர் லாரி TN 51 AZ 6752 வாகனத்தின் ஓட்டுனர் தொடர்ந்து மருத்துவ விடுப்பில் உள்ளதால் பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள 3 வாகங்களை இயக்குவதற்கு 2 ஓட்டுனர்கள் உள்ள நிலையில் குப்பை அகற்றும் பணி தேக்க நிலை ஏற்படும், தினசரி திடக்கழிவுகளை அகற்றப்படுவதில் சிரமமான சூழ்நிலை உள்ளது. குப்பை அகற்றும்பணி அத்தியாவசிய பணி என்பதாலும். மேலும் மேற்படி வாகனத்தை இயக்குவதற்கு ஓட்டுனர் இல்லாத காரணத்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்துள்ள தினக்கூலி விகிதத்தின் அடிப்படையில் (Market Rate) ஓட்டுனர் ஒருவரை 2018-2019 – ம் ஆண்டில் 90 நாட்கள் அதாவது 3 மாத காலஅவகாச்த்திற்கு மட்டும் ஒப்பந்தஅடிப்படையில் பணிக்கு பயன்படுத்திக் கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரவும். பணிமேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.35000/- யை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ-கு) 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவளரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்:1677/2018/எச்1) |
| பொருள் எண்–8 | சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அரசு கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் சுய நிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் மற்றும் அது சம்மந்தப்பட்ட விடுதிகள் நூலகங்கள் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை 5. அவர்களின் கடித ந.க.எண்.7234/2014/ஆர் நாள்.15.03.2018 ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு இதழ் எண் 33 நாள்.25.01.2018 ன் படி தமிழக அரசால் கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதிக்க சட்டம் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்ள மாவட்ட அரசு இதழ் மற்றும் நாளிதழ்களில் விளம்பரம் செய்திடவும் மற்றும் இப்பணி தொடர்பான இதர செலவினங்களுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ150000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு மன்ற பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.792/2018/அ.1 |

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–18.06.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.